**மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள வீதிகள் மற்றும் பாலங்களின் அகலப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் செயற்திட்டம் - 2021**

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள வீதிகள் மற்றும் பாலங்களின் அகலப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. 64.31 கிலோமீற்றர்கள் நீளமான அதாவது RDA வீதிகளின் 62.06 கிலோமீற்றர்கள் மற்றும் மாகாண வீதிகளின் 2.25 கிலோமீற்றர்கள் நீளமான வீதிகளை அகலப்படுத்தி மேம்படுத்துதல் மற்றும் 13 பாலங்களை மீள்நிர்மாணம் செய்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,674.90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் அதில் ரூபா 10,774.74 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 85 மில்லியன் சீனா ஏற்றுமதி - இறக்குமதி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 1,900.16 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2018 நவம்பர் 29 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 நவம்பர் 28 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் கடன் இறுதி திகதி 2022 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான

வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 05 இன் பிரகாரம் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக பொது திறைசேரியால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 600 மில்லியன் தொகையான சமநிலைப்படுத்தல் சீராக்கங்கள் 2021 திசெம்பர் 31 வரை நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | SLPSAS இல. 05 இன் பிரகாரம் சமநிலைப்படுத்தல் அறவீடுகள் சீர்செய்யப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 9.3 ஆம் உட்பிரிவு | சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டவாறு செயற்திட்ட வழிகாட்டல் குழு கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்றுநோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்தப்பட்ட விதிமுறைகள் காரணமாக செயற்திட்ட வழிகாட்டல் குழு கூட்டங்களை பௌதீக ரீதியாக நடாத்த முடியவில்லை. | செயற்திட்ட வழிகாட்டல் குழு கூட்டம் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| இந்த செயற்திட்டம் ஆரம்பத்தில் 2020 நவம்பர் 28 அளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் இது 2022 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டது. எனினும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த செயற்திட்டம் 93 சதவீத பௌதீக முன்னேற்றத்தையும் 86.09 சதவீத நிதி முன்னேற்றத்தையும் அடைந்துள்ளது. | இணங்கப்படவில்லை. செயற்திட்டம் 2020 நவம்பர் 04 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட் 19 தொற்றுநோய், பாதகமான வானிலை, காணி சுவீகரிப்பு செயன்முறையில் தாமதம் அப்பகுதியில் நிலச்சரிவு நிகழ்வுகள் ஏற்படுதல் போன்ற நிலமைகள் காரணமாக, ஒப்பந்ததாரரால் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் பணிகளை பூர்த்தி செய்ய முடியவில்லை. இதன் மூலம், 2022 ஆகஸ்ட் 31 வரை கால நீடிப்பிற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. | தேவையற்ற செலவினங்களை தவிர்ப்பதற்கு மூலத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |